# பழையதிலிருந்து புதியதற்கு: உடன்படிக்கையில் ஒரு மாற்றம்

*இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல (எரே. 31:31, 32அ).*

புதிய உடன்படிக்கையே வேதாகமத்தின் மாபெரும் உடன் படிக்கையாக உள்ளது. அது திட்டமிடப்பட்டு, வாக்குத்தத்தம் செய்யப் பட்டு மற்றும் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு இருந்தது, மற்றும் அது இப்பொழுது கையளிக்கப்பட்டு மற்றும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் புது உடன்படிக்கை பற்றிய தீர்க்கதரிசனங்கள் காணப்படுகின்றன, அவைகளில் முழு நிறைவானது எரேமியா *31:31-34* ஆகும்.

புது உடன்படிக்கையைக் குறிப்பிடும் கூற்றுக்கள் மற்ற வசனப் பகுதிகளிலும் கூடக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஏசாயா *55:3* பின்வருமாறு கூறுகின்றது:

உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்: கேளுங்கள்,
அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்;
தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை
உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்.

இவ்வசனப் பகுதியைப் பவுல் அப். *13:34*ல் இயேசுவுக்குப் பயன் படுத்தினார். புதிய உடன்படிக்கையான என்றென்றைக்கும் உள்ள உடன்படிக்கைக்கு (எபி. *13:20*) இங்கு மற்ற சில குறிப்புகள் தரப் படுகின்றன.

அவர்களுக்கு நன்மை செய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்று போகாத படிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே

*வைத்து (எரே. 32:40; 50:5ஐயும் காணவும்).*

*நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன்; அது அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருக்கும்; நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப் பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன் (எசே. 37:26; 16:60-62ஐயும் காணவும்).*

*அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப் படுத்தி (தானி. 9:27அ).*

*இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல். 3:1).*

## பழைய உடன்படிக்கை புறக்கணிக்கப்பட்டது

*இஸ்ரவேல் நாட்டின் வீழ்ச்சியின் வருடங்களில் எரேமியா தீர்க்க தரிசனம் உரைத்தார். ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் அலைந்து திரிந்த இனத்தைத் தேவன் எகிப்திலிருந்து கானானுக்கு மீண்டும் கொண்டு வந்தார், அங்கு அவர்கள் ஒரு மாபெரும் இனமாகக் குடியமர்ந்தனர். நியாயாதிபதிகளின் நாட்களில் இஸ்ரவேலானது தேவனிடமிருந்து புறம்பே திரும்பி தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த நியாயப்பிரமாணத்தின்படி வாழாமல் போயிற்று. அதற்குப் பதிலாக, “அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்” (நியா. 17:6ஆ). மோசேயின் மூலமாகத் தேவன் அவர்களை “இங்கே இந்நாளில் நாம் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதையெல்லாம் செய்கிறது போல நீங்கள் செய்யாதிருப்பீர்களாக” (உபா. 12:8) என்று எச்சரித்திருந்தும் இது நடைபெற்றது.*

*யோசுவாவினால் வழி நடத்தப்பட்ட தலைமுறை கடந்து போன பிறகு (நியா. 2:7ஐக் காணவும்) பாவம் நிறைந்த இஸ்ரவேலரை தேவன் எவ்விதம் நடத்தினார் என்பதற்கான விவரிப்பு ஒன்று நியாயாதிபதிகளின் புத்தகத்தில் காணப்படுகின்றது.*

*கர்த்தர் சொல்லியபடியும், கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும், அவர்கள் புறப்பட்டுப் போகிற இடமெல்லாம் கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது; மிகவும் நெருக்கப்பட்டார்கள்.*

*கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப் பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள். அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய்,*

அவைகளைப் பணிந்துகொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள். கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுகிறபோது, கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்துவருவார்; அவர்கள் தங்களை இறுகப்பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறதினாலே, கர்த்தர் மனஸ்தாபப் படுவார். நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்து கொள்ளவும், தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் கேடாய் நடந்து, தங்கள் கிர்த்தியங்களையும் தங்கள் முரட்டாட்டமான வழிகளையும் விடாதிருப்பார்கள். ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராகி: இந்த ஜனங்கள் தங்கள் பிதாக்களுக்கு நான் கற்பித்த என் உடன்படிக்கையை மீறி என் சொல்லைக் கேளாதே போனபடியால், யோசுவா மரித்துப் பின்வைத்துப் போன ஜாதிகளில் ஒருவரையும், நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்தி விடாதிருப்பேன். அவர்கள் பிதாக்கள் கர்த்தரின் வழியைக் கவனித்தது போல, அவர்கள் அதிலே நடக்கும்படிக்கு, அதைக் கவனிப்பார்களோ இல்லையோ என்று, அவர்களைக்கொண்டு இஸ்ரவேலைச் சோதிப்பதற்காக அப்படிச் செய்வேன் என்றார் (நியா. 2:15-22).

பெஞ்சமீன் கோத்திரத்திலிருந்து வந்த சவுல் அரசராய் ஏற்படுத்தப் பட்ட பொழுது நியாயாதிபதிகளின் காலம் முடிவுற்றது. சவுலின் கீழ்ப்படியாமையால், தேவன் அரியணையிலிருந்து அவரை நீக்கிப்போட்டு, தாவீதை இஸ்ரவேலின் அரசராக ஏற்படுத்தினார். இஸ்ரவேல் நாட்டின் மகிமையின் உச்சத்தின் போது அதை ஆண்ட சாலொமோன் என்ற தாவீதின் மகன் தனது பல மனைவியர் தன்னை விக்கிரகாராதனைக்குத் திருப்பியதால் தேவனை விட்டுத் திரும்பினார். இதன் காரணமாகத் தேவன் சாலொமோனின் மகன் ரெகொபெயாமுக்கு இரண்டு கோத்திரங்களை மட்டும் கொடுத்து, மற்ற பத்துக் கோத்திரங்களையும் யெரொபெயாமுக்குக் கொடுத்தார் (1 இரா. 11:3, 4, 31). வடக்கில் இருந்த இந்தப் பத்துக் கோத்திரங்களும் இஸ்ரவேல் அரசென்று அறியப்பட்டன, மற்றும் யூதா, பென்சமீன் என்ற இரண்டு தெற்குக் கோத்திரங்கள் (லேவியர்கள் இணையப் பெற்றது; 2 நாளா. 11:14ஐக் காணவும்) யூதா அரசு என்று அறியப்பட்டது.

பல அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்ததைத் தொடர்ந்து இஸ்ர வேல் அரசானது மிக மோசமானதாயிற்று. யூதா அரசானது சற்றுக் காலம் சிறந்தவற்றைச் செய்தது. பின்வருமாறு ஒரு சுருக்கவுரை தரப்பட்டுள்ளது:

நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டதும், என் ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு உங்களுக்குச் சொல்லியனுப்பினதுமான நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளுங்கள் என்று கர்த்தர் தீர்க்கதரிசிகள்

*ஞானதிருஷ்டிக்காரர் எல்லாரையுங் கொண்டு இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் திடச் சாட்சியாய் எச்சரித்துக் கொண்டிருந்தும், அவர்கள் செவிகொடாமல், தங்கள் தேவனாகிய கர்த்தர்மேல் விசுவாசியாமற் போன கடினக் கழுத்துள்ள தங்கள் பிதாக்களைப்போல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, அவருடைய கட்டளைகளையும், அவர் தங்கள் பிதாக்களோட பண்ணின அவருடைய உடன்படிக்கையையும் அவர் தங்களுக்குத் திடச் சாட்சியாய்க் காண்பித்த அவருடைய சாட்சிகளையும் வெறுத்து விட்டு, வீணான விக்கிரகங்களைப் பின்பற்றி வீணராகி, அவர்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களைப்போல செய்ய வேண்டாமென்று கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டு விலக்கியிருந்த ஜாதிகளுக்குப் பின் சென்று, தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, இரண்டு கன்றுக்குட்டிகளாகிய வார்ப்பித்த விக்கிரகங்களைத் தங்களுக்கு உண்டாக்கி, விக்கிரகத் தோப்புகளை நாட்டி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு, பாகாலைச் சேவித்தார்கள். அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப் பண்ணி, குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்து கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப் போட்டார்கள். ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் மிகவும் கோபமடைந்து, அவர்களைத் தம்முடைய முகத்தை விட்டு அகற்றினார்; யூதா கோத்திரமாத்திரமே மீதியாயிற்று (2 இரா. 17:13-18).*

சில ஆண்டுகளுக்குள்ளாகவே யூதாவும் கூட சீர்கேடு அடைந்தது, தேவன் அவர்களைத் தண்டிக்க முடிவு செய்தார். *“நான் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டது போல யூதாவையும் என் முகத்தை விட்டுத் தள்ளி, நான் தெரிந்து கொண்ட இந்த எருசலேம் நகரத்தையும், என் நாமம் விளங்கும் என்று நான் சொன்ன ஆலயத்தையும் வெறுத்து விடுவேன் என்று கர்த்தர் சொன்னார்” (2 இரா. 23:27).*

## புதிய உடன்படிக்கை தீர்க்கதரிசனமாய்க் கூறப்பட்டது

இந்த வரலாற்று அமைப்பில்தான் தேவன் தாம் ஒரு புதிய உடன் படிக்கையை ஏற்படுத்தப்போவதாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார்:

*இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படியல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என்*

*நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களின் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரே. 31:31-34).*

புதிய உடன்படிக்கையானது இஸ்ரவேலை எகிப்திய நாட்டிலிருந்து வெளியே கொண்டுவந்தபோது தேவன் அவர்களுடன் ஏற்படுத்தி யிருந்ததும், இஸ்ரவேலும் யூதாவும் முறித்துப் போட்டிருந்ததுமான அந்த உடன்படிக்கைபோல் இராது. புதிய உடன்படிக்கையானது தேவனுடைய திட்டங்களின் ஒரு பகுதியாக உள்ளது என்ற உண்மையை நிலைநாட்டு வதற்கு இந்த வசனப்பகுதியைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அடிக்கடி பயன்படுத்தி மேற்கோள் காட்டுகின்றனர் (எபி. 8:6-13).

தேவன் எரேமியாவின் மூலமாக வெளிப்படுத்திய இந்த தீர்க்கதரிசன மானது இது கூறிய எல்லாவற்றையும் நாம் கவனிக்கும் அளவுக்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது:

1. *"புதிய உடன்படிக்கை."* உடன்படிக்கையானது "புதியதாக" இருக்கும் என்ற கூற்றானது இது போன்ற உடன்படிக்கை இன்னமும் ஏற்படுத்தப்பட்டிருந்ததில்லை என்று மறைமுகமாய் உணர்த்திற்று. இது இன்னொரு உடன்படிக்கையின் மறுசெயல்பாடாக இன்றி, முந்திய எந்த உடன்படிக்கை அல்லது ஒத்த பகுதியில் இருந்து இயல்பில் முற்றிலும் புதியதாகவும் மாறுபட்டதாகவும் இருக்கும்.

2. *"நாட்கள் வரும் ... அப்பொழுது ... பண்ணுவேன்."* புதிய ஏற்பாடு பற்றித் தேவன், "நான் பண்ணுவேன்" என்று கூறிய உண்மையானது அது முன்பு ஏற்படுத்தப்பட்டிருந்ததில்லை ஆனால் (அந்தக் கூற்றுக்குப் பிந்திய) எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் என்று அர்த்தப்பட்டிருக்க வேண்டும். அது கொடுக்கப்படும் பொழுது, தேவன் அமைத்து வைத்த அவருடைய நிபந்தனைகளின்படி உண்டாக்கப்பட்டதாயிருக்கும்.

3. *"அவர்களுடைய பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையின் படியல்ல."* ஒரு புதிய உடன்படிக்கையாயிருக்கும் வகையில் அது தேவன் அதற்கு முன்பு ஏற்படுத்தியிருந்த எந்த உடன்படிக்கையிலிருந்தும் மாறுபட்டதாய் இருக்கும் (யாத். 34:27, 28; உபா. 4:14; 10:1-5).

இந்தப் புதிய உடன்படிக்கையானது தேவன் இஸ்ரவேலரின் பிதாக்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்த போது அவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டிருந்த உடன்படிக்கையைப் போல் "இராது" என்று தேவன் கூறியது குறிப்பிடத்தக்கதாக உள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். வேறு சில உடன்படிக்கைகளையன்றி அந்த உடன்படிக்கை குறிப்பிடப்பட்டது ஏன்? இஸ்ரவேலர்கள் தேவனுடனான தங்களது உறவானது அந்த உடன்படிக்கையினால் உறுதிப் படுத்தப்பட்டது என்று

நம்பியதே இதற்குத் தெளிவான காரணமாகும். அவர்கள் அதைச் சார்ந்திருந்து, அது தேவன் தங்கள் தேவனாய் உள்ளார், அவர் தங்களோடு உள்ளார், அவர் தங்களைப் பாதுகாப்பார் என்பதற்கு அவர்களின் உறுதிப்பாடாக அதைக் கண்ணோக்கினர். உண்மையில், அந்த உடன்படிக்கையை அவர்கள் காத்துக் கொண்டால் தேவன் அவர்களைப் பராமரிப்பார் - அவர்கள் அதை மீறினால் அவர்களை அவர் பராமரிக்க மாட்டார்.

உடன்படிக்கையில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்குச் சுட்டிக்காட்டுதலானது யுத்த களத்தில் உடன்படிக்கைப் பேழை கொண்டு வரப்பட்ட பொழுது அவர்களின் தைரியம் பெருகின வழிமுறையில் காணப்படலாம் (1 சாமு. 4:5). இரண்டு கற்பலகைகளைத் தன்னுள் கொண்டிருந்த அப்பேழையின் பிரசன்னமானது தேவன் இஸ்ரவேலருக்கு யுத்தத்தில் உதவி, போரை வெற்றி கொள்ளச் செய்வார் என்ற உறுதிப்பாட்டை அவர்களுக்கு அளித்தது.

*4. "உடன்படிக்கையை அவர்கள் மீறினர்."* பத்துக் கட்டளைகளும் உடன்படிக்கையின் மற்ற பாகங்களாய் இருந்த சட்டங்களும் அது கொடுக்கப்பட்ட நாளிலேயே இஸ்ரவேலர்களால் மீறப்பட்டு முறித்துப் போடப்பட்டதாக இருந்தது. அதை மதிக்கவும் காத்துக் கொள்ளவும் தவறியதானது மறுபடியும் மறுபடியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அதை மீறி முறித்துப் போடுவார்கள் என்று தீர்க்கதரிசிகள் அறிவித்தனர் (உபா. 31:20). மேலும், அவர்கள் அதை முறித்துப் போட்டனர் (லேவி. 26:15; ஏசா. 24:5; 33:8; எரே. 11:10; எசே. 16:59), கைவிட்டனர் (உபா. 29:25; 1 இரா. 19:10, 14), மீறிப் போயினர் (யோசு. 7:15; நியா. 2:20; 2 இரா. 18:12; எரே. 34:18; ஓசி. 8:1), மறுதலித்தனர் (2 இரா. 17:15), மீறி நடந்தனர் (சங். 55:20), கைக்கொள்ளாதிருந்தனர் (சங். 78:10), அதற்கு உண்மையற்று இருந்தனர் (சங். 78:37), மற்றும் அதை அவமாக்கினர் (எசே. 44:7) என்று வேதாகம கூற்றுக்கள் எடுத்துரைக்கின்றன. எரே. 31:32ல் தேவன், புதிய உடன்படிக்கையான "நித்திய உடன்படிக்கையானது" (எபி. 13:20) இஸ்ரவேலர் மீறிப்போட்ட உடன்படிக்கை போலிராது என்று கூறினார்.

*5. "அதை அவர்கள் இருதயத்திலே எழுதி."* புதிய உடன்படிக்கையானது இருதயத்தில் எழுதப்படும் என்ற உண்மையானது உரைக்கப்பட்டுள்ளது, ஆனால் எவ்விதம் என்பது உரைக்கப்படவில்லை. இது புதிய உடன்படிக்கையின் போதனை மூலமாகப் பரிசுத்த ஆவியானவரால் இருதயத்தில் எழுதப்படுமா அல்லது வேறு சில வழி வகையில் எழுதப்படுமா என்று நமக்குக் கூறப்படவில்லை.

*6. "எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள்."* தேவனைப் பற்றிய இந்த அறிவானது தேவனுடைய இயல்பைப் பற்றி ஒவ்வொரு நபருக்கும் தனிப்பட்ட முறையில் ஒரு வெளிப்படுத்துதலினால் கொண்டு வரப்படுவதில்லை. "எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள்" என்று தேவன் கூறிய பொழுது அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை, ஆனால் அவர் தம்மை எல்லாரும் அறிந்து கொள்ளும் வழிமுறை பற்றியும் விளக்கம் அளித்தார்: "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." ஆங்கில வேதாகமத்தில்

இவ்வாக்கியத்தின் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "for" என்ற வார்த்தையானது தேவன் தம்மை எவ்விதம் அறியச் செய்வார் என்பதை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய உண்மையான இயல்பை, உலகத்தின் பாவங்களுக்காகத் தம்முடைய குமாரனை ஒப்புக் கொடுத்தலின் மூலம் ஒரு மன்னிக்கும் தேவனாக உள்ள தம்முடைய இயல்பை வெளிப்படுத்துவார். தேவனுடைய தற்சுரூபத்தில் உள்ள இயேசுவானவர் (கொலோ. 1:15; எபி. 1:2, 3) பிதாவின் இயல்பை மனித குலத்திற்குக் காண்பிப்பார் (யோவா. 12:45; 14:9).

## முடிவுரை

புதிய உடன்படிக்கை குறித்த தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன, ஆனால் புதிய உடன்படிக்கையின் விதிகள் அங்கு காணப்படுவதில்லை. இவைகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. புதிய உடன்படிக்கையானது இஸ்ரவேலர்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு வந்தபோது தேவன் அவர்களோடு ஏற்படுத்திய பழைய உடன்படிக்கை போல் இராது. தேவன் தாம் ஏற்படுத்த இருந்த புதிய உடன்படிக்கையைத் திட்டமிட்டு, அதற்கு ஆயத்தம் செய்து, அதை தீர்க்கதரிசனமாக உரைத்திருந்தார்.